பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 05 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கான நான்காம் கட்டத்தேர்தல் சுமூகமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

2. மாநில அரசுகளுக்கான நிதி பகிர்வு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களுடைய யோசனைகளையும், பரிந்துரைகளையும் தெரிவிக்குமாறு 16-ஆவது நிதி ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

3. உலக **Thalassemia** தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

4. ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரசேதத்தில் நாளை மறுநாள் வரை அனல்காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. **Wuxi** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - தைவானின் **Ray Ho** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>**

மக்களவைக்கான நான்காம் கட்டத்தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனையில் தேர்தல் பார்வையாளர்கள் 354 பேர் பங்கேற்றனர்.

நான்காம் கட்ட மக்களவைத் தேர்தலை சுமூகமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உறுதி செய்ய வேண்டும் என்று திரு ராஜீவ்குமார் அறிவுறுத்தினார்.

இந்த நான்காம் கட்டத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 96 தொகுதிகளில் வரும் 13-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, மக்களவைக்கான ஐந்தாவது கட்டத் தேர்தலில் 695 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. எட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 49 தொகுதிகளில் வரும் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

அதிகபட்சமாக மகாராஷ்ட்ராவில் 264 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதற்கிடையே, நான்காம் கட்டமாக வரும் 13-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று, ஆந்திரா மற்றும் தெலங்கானா மாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் படைத்த சாதனைகளுக்கு மக்கள் அளித்த வாக்குகளே காரணம் என்றும் அவர் கூறினார்.

வளர்ச்சியை மட்டுமே தாரக மந்திரமாக கொண்டு பிஜேபி செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியை பொறுத்தவரை வளர்ச்சிக்கான அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மக்களிடையே காங்கிரஸ் பிரிவினையை ஏற்படுத்துவதாகவும், திரு நரேந்திர மோடி குறை கூறினார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி, உத்தரப்பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால் அங்கன்வாடி மற்றும் ஆஷா பணியாளர்களுக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்ட பயனாளிகளுக்குமான ஊதியம் உயர்த்தப்படும் என்று உறுதியளித்தார்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குறித்து தவறான தகவல்களை பிஜேபி தெரிவிப்பதாக திருமதி பிரியங்கா காந்தி கூறினார்.

சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு அகிலேஷ் யாதவ், உத்தரப்பிரசேத்தின் **Shahjahanpur**-ல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை பிஜேபி நிறைவேற்றவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா-வும், அம்மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசுகையில், மத்திய அரசு நிறைவேற்றிய திட்டங்களை பட்டியலிட்டார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

வளர்ச்சிக்கான அரசியலுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

இமாச்சலப்பிரதேசத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அனுராக் தாக்கூர், பாதுகாப்புப்படை வீரர்களின் நலனுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கூடுதல் முக்கியத்துவம் வழங்கியதாக தெரிவித்தார்.

மக்களவைக்கான தேர்தல் ஏழு கட்டங்களாக கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை ஜுன் மாதம் 4-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>

இந்தியர்கள் குறித்து காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு சாம் பிட்ரோடா தெரிவித்துள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கள் கண்டிக்கத்தக்கது என்று பிஜேபி கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, நாட்டின் கலாச்சாரம் மற்றும் அடையாளத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் திரு சாம் பிட்ரோடா கருத்துக்களை தெரிவித்துள்ளதாக கூறினார்.

மக்களிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தும் வகையில் காங்கிரஸ் செயல்பட்டு வருவது இதன்மூலம் உறுதி செய்யப்பட்டிருப்பதாக திரு சுதான்ஷு திரிவேதி குற்றம் சாட்டினார்.

முன்னதாக, இந்தியர்களை சீனா மற்றும் ஆப்பிரிக்க நாட்டினரோடு ஒப்பிட்டு திரு சாம் பிட்ரோடா கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே, திரு சாம் பிட்ரோடா தெரிவித்த இந்த கருத்து துரதிருஷ்டவசமானது என்று காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

இதனை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

திரு சாம் பிட்ரோடா வெளியிட்ட கருத்து, காங்கிரஸ் கட்சியின் கருத்துக்கள் இல்லை என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

இந்த பிரச்சினையையடுத்து, திரு சாம் பிட்ரோடா, கட்சிப்பதவியை ராஜினாமா செய்ய முன்வந்துள்ளதாகவும், அதனை காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே ஏற்றுக்கொண்டதாகவும் திரு ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

உலக **Thalassemia** தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இந்த நோய் வராமல் தடுப்பது மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, நாடு முழுவதும் தற்போது சுமார் ஒரு லட்சம் பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஆண்டுதோறும் சுமார் 10 ஆயிரம் பேர் இந்த நோயினால் புதிதாக பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

உரிய பரிசோதனை மூலம் நோயை கண்டறிந்து முன்கூட்டியே செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் **Thalassemia** –தொடர்பான விழிப்புணர்வு காணொலியையும் திரு அபூர்வ சந்திரா வெளியிட்டார்.

<<<<<<>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் பொதுத்துறை நிறுவனங்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்த கருத்தினை நிராகரித்து திருமதி நிர்மலா சீதாராமன் இக்கருத்தினை சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிகாலத்தில்தான் பொதுத்துறை நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கியதாக தெரிவித்துள்ளார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் முக்கியத்தும் அளித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள் பயனடைந்திருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மத்திய அரசின் தவறான கொள்கைகள் காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்படுவதாக திரு ராகுல்காந்தி கருத்து தெரிவித்திருந்தார்.

<<<<<<>>>>>

மாநில அரசுகளுக்கான நிதி பகிர்வு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களுடைய யோசனைகளையும், பரிந்துரைகளையும் தெரிவிக்குமாறு 16-ஆவது நிதி ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

**fincomindia.nic.in** என்ற இணையதளத்தில் ஆலோசனைகளுக்கான கருத்துக்கேட்பு என்ற பிரிவினை பயன்படுத்தி யோசனைகளை தெரிவிக்கலாம் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரிலிருந்து நடப்பாண்டில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கான முதலாவது விமானம் ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நாளை புறப்பட்டு செல்ல உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முதல்கட்டமாக, 37 பேர் பெண்கள் உட்பட 320 பேர் ஹஜ் புனித பயணம் மேற்கொள்கின்றனர்.

இதற்கென விமான நிலையத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் நாளை மறுநாள் வரை அனல்காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

குஜராத்தின் கடலோர பகுதிகள் மற்றும் புதுச்சேரியிலும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குவங்கம், பீகார், ஜார்கண்ட், ஒடிஷா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Wuxi** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - தைவானின் **Ray Ho** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-2, 6-2 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Blake Ellis – Blake Bayldon** இணையை வென்றது.

--------------

ஆசிய ஓபன் **Pickle Ball** சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 2 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியின், கலப்பு இரட்டையர் பிரிவில், **Sachin Pahwa – Priyanka Chhabra** இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Isha Lakhani – Pei Chuan Kao** இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவிலும் இந்தியாவிற்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

துபாயில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் நான்காவது சுற்று முடிவில், இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் நான்கு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

<<<<<<END>>>>>